FIRST INFORMATION REPORT **TAMIL NADU POLICE**
முதல் தகவல் அறிக்கை INTEGRATED INVESTIGATION FORM-I
Under Section 173 BNSS / (Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்) C 8109730

1. District : அரியலூர் PS: இலந்தபாடி Year: 2026 FIR No.: 05/26 Date: 28.08.26
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: உழவர் நலப்பாதுகாப்புச்சட்டம் 1988 Sections பிரிவுகள்: 7 & 12 R/w 7 of
(ii) Act சட்டம்: (as amended in 2017) Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: PC Act
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் 27.08.26 நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 15.30 Time to : 19.30
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : Time
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.08.26 நேரம் 16.00 Hrs
(c) General Diary Reference : Entry No(s) Time
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28.08.26 நேரம் 16.00 Hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் பெறப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தென்மேற்கு அரியலூர்
Beat Number : (b) Address : சுமார் 1 Km தென்மேற்கு
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (1) பாண்டியன் தந்தை / கணவர் பெயர் (1) மருதமுத்து
(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு 60/26 நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : (g) Address :
தொழில் முகவரி (1) முதலை மாவட்ட குடியிருப்பு அரியலூர், அரியலூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
(1) நிலவன் த/பெ பாண்டியன், முதலைப்பட்டி, அரியலூர் மற்றும் மனைவி
செல்வி

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
இல்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு NIL

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் NIL

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) NIL

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

28/08/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

28.08.26 at 17.30 Hrs

Name: பெயர்
Rank: நிலை No. எண்

28.08.26

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:
அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 05/2026 முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-க்கான இணைப்பு:-

எதிரிகள் 1. திருமதி.க.தேவகி, வட்டாட்சியர், அரியலூர், அரியலூர் மாவட்டம். 2. திரு.தனராஜ், 36/2026, த/பெ. தனபால், Census Technical Assistant, தற்காலிக ஒப்பந்த பணியாளர், வட்டாட்சியர் அலுவலகம், அரியலூர். 3. திரு.மகேந்திரன், 31/2026, த/பெ அறிவழகன், கிராம நிர்வாக அலுவலர், கரைவெட்டி, அரியலூரர் மாவட்டம் 4. திரு.கதிர்வேல், 51/26, த/பெ. கந்தசாமி, துணை ஆய்வாளர் (சர்வே), வட்டாட்சியர் அலுவலகம், அரியலூர். 5. திரு.சிவக்குமார், 46/2026, த/பெ சதாசிவம், வடக்கு தெரு, நாயக்கர் பாளையம், அரியலூர்.	இன்று 28.08.2026 ஆம் தேதி 16.00 மணிக்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது ரா.சின்னையன், துணை ஆய்வுக்குழு அலுவலர், அரியலூர் என்பவர் என் முன் ஆஜராகி கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் கு.செந்தில்குமார், வயது 60/2026 த/பெ. குப்புசாமி, முதுநிலை வருவாய் ஆய்வாளர்/மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், சமூக பாதுகாப்புத்திட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அரியலூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, அரியலூர். அம்மா, பொருள்: அரியலூர் மாவட்டம், அரியலூர் தாசில்தார் அலுவலகம் - 27.08.2026 அன்று அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் திடீர் இணை சோதனை மேற்கொள்ளப்பட்டது - மேல் நடவடிக்கை வேண்டி புகார் அளித்தல் - தொடர்பாக... பார்வை 1.திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்களின் ந.க.எண். அ1/136/2026 நாள்: 27.08.2026 2.அரியலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ந.க.எண். அ2/240/2022, நாள்: 27.08.2026. திடீர் இணை சோதனை செயல்முறைகள், நாள்: 27.08..2026.

நான், அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். அரியலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ந.க.எண்.அ2/240/2022, நாள்:27.08.2026-இன் படி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராக நியமிக்கப்பட்டேன். அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் வட்டாட்சியர் திருமதி.க.தேவகி மற்றும் வட்டாட்சியர் அலுவலக பணியாளர்கள் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம், அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதற்காகவும், ஏரிகளில் வண்டல் மண் எடுக்க அனுமதி வழங்குவதற்காகவும், வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக பணிபுரிந்து வரும் திரு.தனராஜ் என்பவர் மூலம் ரொக்கமாகவும், அவரது Google Pay Account மூலமாகவும் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாகவும் கையூட்டு பணம் கேட்டு பெற்றுக்கொண்டு, அலுவலகப் பணிகளை செய்து

கொடுத்து வருவதாக அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் இன்று 27.08.2026 ஆம் தேதி சுமார் 15.30 மணியளவில் விஜிலென்ஸ் குழுவினருடன் என்னால் திடீர் இணைசோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த இணை திடீர் சோதனையின் போது அரியலூர் தாலுக்கா அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களிமிருந்தும் மற்றும் தனிநபரிடமிருந்தும், மேற்படி அலுவலகத்தில் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் தனராஜ் ஆகியோர்களிடமிருந்தும் ரூ.19,000/- மட்டும் யாரிடமிருந்தாவது லஞ்சமாக பெற்ற பணமாக இருக்கலாம் அல்லது யாருக்கேனும் லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் என்னால் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் ஒப்பந்த பணியாளர் திரு.தன்ராஜ் என்பவர் மொத்தம் ரூ.7,24,500/- தெகையை Google Pay மூலம் ஏரிகளில் இருந்து வண்டல் மண் எடுக்க அனுமதி கோரும் நபரிடமிருந்து பெற்றுள்ளதும் அத்தொகையை வருவாய்துறையை சேர்ந்த அலுவலர்களுக்கும் அனுப்பியுள்ளது தெரியவந்துள்ளது. இது தொடர்பாக அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு மடிகனிணி மூலம் திடீர் இணை சோதனை செயல்முறைகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு. 27.08.2026 சுமார் 15.30 மணியளவில் அரியலூர் மாவட்டம், அரியலூர் பேருந்து நிலையம் எதிரில் தெற்கு பார்த்த வாயிலுடன் அமைந்துள்ள அரியலூர் வட்டாட்சியர் அலுவலகத்தினை கு.செந்தில்குமார், வயது 60/2026 த/பெ. குப்புசாமி, முதுநிலை வருவாய் ஆய்வாளர்/மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், சமூக பாதுகாப்புத்திட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அரியலூர் மாவட்டம் மற்றும் அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.பா.கவிதா மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் மேற்கொள்ளப்படும் இணை திடீர் சோதனை செயல்முறை நடவடிக்கைகள் குறித்து அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக மடிக்கணினி மூலம் தயார் செய்யப்படும் செயல்முறைகள். அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் வட்டாட்சியர் திருமதி.க.தேவகி மற்றும் வட்டாட்சியர் அலுவலக பணியாளர்கள் வட்டாட்சியர் வரும் பொதுமக்களிடம், அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதற்காகவும், ஏரிகளில் வண்டல் மண் எடுக்க அனுமதி வழங்குவதற்காகவும், வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக பணிபுரிந்து வரும் திரு.தனராஜ் என்பவர் மூலம் ரொக்கமாகவும், அவரது Google Pay Account மூலமாகவும் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாகவும் கையூட்டு பணம் கேட்டு பெற்றுக்கொண்டு, அலுவலகப் பணிகளை செய்து கொடுத்து வருவதாக அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் இன்று 27.08.2026 ஆம் தேதி சுமார் 15.30 மணியளவில் ஆய்வுகுழு

ஆய்வாளர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் மேற்படி அலுவலகத்திற்கு வந்து, மேற்படி அலுவலகத்தில் உள்ள வட்டாட்சியர் அறையில் பார்த்தபோது அந்த அறையில் இரண்டு நபர்கள் இருந்தனர். வட்டாட்சியர் அவரது இருக்கையில் இல்லை. அந்த அறையில் இருந்த நபர்களிடம் விசாரித்தபோது வட்டாட்சியர் அறைக்கு மேற்கு புறம் உள்ள அலுவலக கட்டிடத்தில் இருப்பதாக தெரிவித்தனர். எனவே, அவர்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு அந்த அறையிலிருந்து வெளியே வந்தபோது, வட்டாட்சியர் அறைக்கு முன்புறம் உள்ள வராண்டாவில் ஒரு நபர் இரண்டு சக்கர வகனத்தை நிறுத்தினார். அவரை விசாரித்தபோது தனது பெயர் தனராஜ் என்றும், வட்டாட்சியர் அலவலக தற்காலிக பணியாளர் என்றும் கூறினார். பின்னர், அவர்கள் மூவரையும் அழைத்துக்கொண்டு அலுவலக கட்டிடத்திற்கு உள்ள வந்தபோது, பொது தகவல் அலுவலர் மற்றும் தலைமையிடத்து துணை தாசில்தார் அவர்களது அறையில் இருந்த வட்டாட்சியரிடம் ஆய்வுக்குழு அலுவலராகிய என்னையும், என்னுடன் வந்திருந்த விஜிலென்ஸ் ஆய்வாளர் மற்றும் குழுவினரையும் அறிமுகம் செய்து கொண்டு, இணை திடீர் சோதனை செய்ய வந்துள்ள விரபத்தினை தெரிவித்து, சோதனை நடத்த ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக்கொண்டேன். பின்னர் வட்டாட்சியரை விசாரித்தபோது தனது பெயர் க.தேவகி, வயது 51/2026, க/பெ. கணபதி என்றும் தான் கடந்த 01.03.2026 முதல் அரியலூர் வட்டாட்சியராக பணிபுரிந்து வருவதாகவும் கூறினார். அவரை ஆய்வாளர் திருமதி.பா.கவிதா அவர்கள் சோதனை செய்தபோது, அவரது ஹேண்ட் பேக்கில் ரூ.180/- மட்டும் இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்டபோது, அது தனது கைச்செலவிற்காக வைத்திருந்த தனது சொந்தப்பணம் என்று கூறினார். எனவே, அந்த பணம் ரூ.180/- அவரிடமே திருப்பிக் கொடுக்கப்பட்டது. பின்னர் அந்த அறையில் இருந்த தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அவர்களை விசாரித்தபோது தனது பெயர் சி.ராஜா, வயது 41/2026, த/பெ. சித்தார்த்தன் என்றும் தான் 21.06.2024 ஆம் தேதி முதல் அரியலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் தலைமையிடத்து துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருவதாகவும் கூறினார். பின்னர் அவரை சோதனை செய்தபோது, அவரிடம் பணம் ஏதும் இல்லை. பின்னர் திரு.தனராஜ் என்பவரை விசாரணை செய்த போது, தனது பெயர் தனராஜ், வயது 36/2026, த/பெ தனபால் என்றும், தான் Census Technical Assistant ஆக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். பின்னர் சோதனை செய்தபோது, அவரது சட்டைப்பையில் ரூ.1000/-மும், அவரது பர்சில் ரூ.580/-ம் இருந்தது. அந்த பணம் பற்றி கேட்க ரூ.580/- தனது கைச்செலவிற்கு வைத்திருந்த தனது சொந்த பணம் என்றும், ரூ.1000/-க்கு சரியான முகாந்திரம் கூறாமலும் இருந்தார். எனவே, அவரது சொந்தப்பணம் ரூ.580/- மட்டும் அவரிடமே திருப்பிக் கொடுக்கப்பட்டது. சந்தேகத்திற்குறிய பணம் ரூ.1000/- யாரிடமிருந்தேனும் லஞ்சமாக கேட்டு

பெற்று வைத்திருந்த பணமாகவோ அல்லது யாருக்கேனும் லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணமாகவோ இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், அவரை விசாரித்து, அவரது செல்போனில் உள்ள G.Pay Account மற்றும் SBI YONO பரிவர்த்தனைகளை காண்பிக்குமாறு கூறி, பார்த்தபோது 03.07.2026 ஆம் தேதி முதல் 27.08.2026 ஆம் தேதி வரை பல்வேறு நபர்களிடமிருந்து மொத்தம் ரூ.7,24,500/- (ரூபாய் ஏழு லட்சத்து இருபத்து நான்காயிரத்து ஐநூறு மட்டும்) பணம் பெற்றுள்ளதும், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர்கள், மாவட்ட ஆட்சியரகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் ஆகியோர்களுக்கு இவரது வங்கி கணக்கிலிருந்து பணம் செலுத்தியுள்ளதும் தெரியவருகிறது. மேலும், இன்றைய தினம் திரு.ஆனந்தகுமார் என்பவரது செல் எண் 9786409404-ல் இருந்து ரூ.6,000/-ம் பெறப்பட்டுள்ளதும், மேற்படி ஆனந்தகுமார் செல்போனிலிருந்து Whatsapp மூலம் TN46D6050, TN61X4630 ஆகிய இரண்டு வாகனங்களின் எண்களையும், மேற்படி படி பணம் அனுப்பியதற்காக screenshot image-ம் அனுப்பப்பட்டிருந்தது. அது குறித்து தனராஜிடம் கேட்டபோது வண்டல் மண் எடுப்பதற்கான permit வழங்க பணம் அனுப்பியுள்ளதாகவும், அரியலூர் வட்டாட்சியர் திருமதி.தேவகி அவர்கள் சொன்னதன் பேரில் வண்டல் மண் எடுக்க அனுமதி வழங்குவதற்காக மேற்படி ஆனந்தகுமார் என்பவரிடமிருந்தும், இதற்கு முன்பும் பல்வேறு ஊர்களைச்சேர்ந்த பல்வேறு நபர்களிடமிருந்தும் நேரடியாகவும், G.Pay மூலமாகவும் பணம் பெற்றதாகவும், அந்த பணத்திலிருந்து வருவாய்த்துறையில் பணிபுரியும் பல்வேறு அரசு ஊழியர்களுக்கும், வட்டாட்சியர் திருமதி.தேவகி அவர்களுக்கும் ரொக்கமாகவும், G.Pay (9843710495) மூலமாகவும் கொடுத்ததாக தெரிவித்தார். மேலும், தான் வங்கிக்கணக்கின் மூலம் பெற்ற லஞ்சப்பணத்தில் மீதம் ரூ.8,000/-ம் தனது வங்கி கணக்கில் இருப்பில் இருப்பதாகவும், மேற்படி பணத்தை ATM-ல் இருந்து எடுத்து ஆஜர் செய்வதாக கூறி, வட்டாட்சியரீ அலுவலக வளாகத்தில் உள்ள ATM-ல் இருந்து ரூ.8,000/-த்தை எடுத்து ஆஜர் செய்தார். மேலும், அவரை விசாரிக்க வண்டல் மண் எடுக்க விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஆன்லைனில் விண்ணப்பித்துவிட்டு, என்னை தொடர்பு கொண்டு வாகனங்களின் பதிவு எண்களை எனது whatsapp எண்ணிற்கு அனுப்பி வைப்பார்கள், நான் வட்டாட்சியர் அவர்களிடம் தெரிவிப்பேன் என்றும், பின்னர் வட்டாட்சியர் அவர்கள் வண்டல்மண் எடுப்பதற்கு அனுமதி ஆணை வழங்கியதும் அதன் நகலை சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு எனது whatsapp மூலம் அனுப்பிவிடுவேன் என்றும், அவர்கள் அதனை வைத்துக்கொண்டு வண்டல் மண் அள்ளுவார்கள் என்றும் சொன்னார். பின்னர் திரு.தனராஜ் என்பவரிடம் விசாரணை செய்து கொண்டிருக்கும்போது அவரது செல்போன் எண்ணிற்கு சிவக்குமார் என்பவர் 9786333742 என்ற செல்போன் எண்ணிலிருந்து தொடர்பு கொண்டார்.

அப்போது அவரது செல்போனில் loud speaker-ல் போடச்சொல்லி பேசச் சொன்னபோது, திரு.சிவக்குமார் என்பவர் தான் வழக்கமாக பணம் கொடுக்கும் இடத்தில் நிற்பதாக தெரிவித்து, எங்கே சார் இருக்கீங்க, பணம் ரூ.6,000/-ம் எடுத்து வந்திருக்கிறேன், பர்மிட் சம்பந்தமாக உங்களை பார்க்க வேண்டும் என்று சொன்னவரிடம், தனராஜ் தான் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருப்பதாக தெரிவித்தார். பின்னர், சிறிது நேரத்தில் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரில் வந்த திரு.சிவக்குமார் என்பவரை விசாரிக்க, தான் வண்டல்மண் எடுப்பதற்கான பர்மிட் சம்பந்தமாக தனராஜிடம் பணம் கொடுக்க வந்ததாக சொன்னார். அவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.6,000/-ம் இருந்தது. எனவே, அந்த பணம் ரூ.6,000/- லஞ்சம் கொடுப்பதற்காக கொண்டுவந்த பணம் என்பதால் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர், வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்த ஊழியர்களை விசாரித்து, சோதனை செய்தபோது கீழ்காணும் அட்டவணையில் கண்டுள்ளபடி பணம் வைத்திருந்தார்கள். தாங்கள் வைத்திருந்த பணத்திற்கு சரியான முகாந்திரம் கூறிய நபர்களது பணத்தினை அவர்களிடமே திருப்பிக் கொடுக்கப்பட்டது. சரியான முகாந்திரம் கூறாத நபர்களது பணம் யாரிடமிருந்தேனும் லஞ்சமாக கேட்டு பெற்று வைத்திருந்த பணமாகவோ அல்லது யாருக்கேனும் லஞ்சம் கொடுக்க வைத்திருந்த பணமாகவோ இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. **அதன் விபரம் பின்வருமாறு.**

வ. எண்.	பெயர், விபரம்	வைத்திருந்த தொகை	திருப்பி கொடுக்கப்பட்ட தொகை	கைப்பற்றப்பட்ட தொகை
1.	திருமதி.க.தேவகி, வட்டாட்சியர், அரியலூர், அரியலூர் மாவட்டம்.	180/-	180/-	-
2.	திரு.தனராஜ், 36/2026, த/பெ. தனபால், Census Technical Assistant, தற்காலிக ஒப்பந்த பணியாளர், வட்டாட்சியர் அலுவலகம், அரியலூர்.	9580/-	580/-	9000/-
3.	திரு.மகேந்திரன், 31/2026, த/பெ அறிவழகன், கிராம நிர்வாக அலுவலர், கரைவெட்டி, அரியலூர் மாவட்டம்	2680/-	180/-	2500/-
4.	திரு.கதிர்வேல், 51/26, த/பெ. கந்தசாமி, துணை ஆய்வாளர் (சர்வே), வட்டாட்சியர் அலுவலகம், அரியலூர்.	1900/-	400/-	1500/-

5.	திரு.சிவக்குமார், 46/2026, த/பெ சதாசிவம், வடக்கு தெரு, நாயக்கர் பாளையம், அரியலூர்.	6,000/-	-	6,000/-
6.	சி.ராஜா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், அரியலூர்.	-	-	-
7.	திரு.பழனிவேலன், 52/2026, த/பெ. செள.மணி, துணை வட்டாட்சியர், தேர்தல் பிரிவு, அரியலூர்.	150/-	150/-	-
8.	திரு.மனோஜ்குமார், 30/2026, த/பெ. சண்முகம், உதவியாளர் (தேர்தல் பிரிவு) அரியலூர் வட்டாட்சியர் அலுவலகம், அரியலூர்.	54/-	54/-	-
9.	திரு.பாக்கியராஜ், 40/2026 த/பெ. மகாலிங்கம், முதுநிலை வரைவாளர் (சர்வே), வட்டாட்சியர் அலுவலகம், அரியலூர்.	220/-	220/-	-
10.	திரு.எழிலரசன், 28/2026 த/பெ. ராமமூர்த்தி, நில அளவர், அரியலூர்.	270/-	270/-	-
11.	திரு.சிபிச்சக்கரவர்த்தி, 43/2026 த/பெ. பெரியசாமி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், அரியலூர்.	450/-	450/-	-
12.	திரு.கோ.கார்த்திகேயன், 43/2026, த/பெ. கோவிந்தராஜ், முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், அரியலூர்.	240/-	240/-	-
13.	திரு.இளங்கோவன், 47/2026, த/பெ ராமலிங்கம், முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், அரியலூர்.	100/-	100/-	-
14.	திரு.மகாலிங்கம். 36/2026, த/பெ ஜெகநாதன், இளநிலை வருவாய்	460/-	460/-	-

	ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், அரியலூர்.			
15.	திருமதி.பிரதிஷ்டா, 31/2026, த/பெ ஜெயராமன், முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், அரியலூர்.	150/-	150/-	-
16.	செல்வி.சூர்யா, 28/2026 த/பெ அசோகன், முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், அரியலூர்.	70/-	70/-	-
17.	திருமதி.ஆரோக்கியசோபா, 27/2026, த/பெ ஆரோக்கியதாஸ், அலுவலக உதவியாளர், வட்டாட்சியர் அலுவலகம், அரியலூர்.	50/-	50/-	-
18.	திருமதி.வின்சிலாமேரி, 46/2026, த/பெ ஜோசப்ராஜ், Filed Assist, Survey department, அரியலூர்.	950/-	950/-	-
19.	திருமதி.விஜி, 37/2026, க/பெ சாமிநாதன், Filed Assist, Survey department, அரியலூர்.	-	-	-
20.	திருமதி.அனுசியாதேவி, 34/2026, க/பெ வெங்கடேசன், கிராம நிர்வாக அலுவலர், ரெட்டிபாளையம், அரியலூர்	-	-	-
21.	திருமதி.கவிப்பிரியா, 33/2026, க/பெ கலைக்கோவன், வருவாய் ஆய்வாளர், நாகமங்கலம், அரியலூர்.	-	-	-
22.	திருமதி.செல்வி, 43/2026, க/பெ மணிகண்டன், கிராம நிர்வாக அலுவலர், கருப்பூர் சேனாபதி, அரியலூர்	200/-	200/-	-
23.	திருமதி.வேம்பு, 26/2026, த/பெ சீனிவாசன், கிராம நிர்வாக அலுவலர், புங்கன்குழி, அரியலூர்	-	-	-
24.	திரு.மோகன்குமார், 43/2026, த/பெ பரமசிவம், கிராம நிர்வாக அலுவலர், சிறுவலூர், அரியலூர்.	-	-	-

25.	திரு.கனகராஜ், 36/2026, த/பெ கண்ணையா, கிராம நிர்வாக அலுவலர், ஆலந்துறையார்கட்டளை, அரியலூர்	-	-	-
26.	திருமதி.மஞ்சுளா, க/பெ குமாரசாமி, தனிவட்டாட்சியர், அரியலூர்.	200/-	200/-	-
27.	திரு.சந்திரன், 53/2026, த/பெ கந்தசாமி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், அ-3 இருக்கை, வட்டாட்சியர் அலுவலகம், அரியலூர்	200/-	200/-	-
28.	திரு.அண்ணாதுரை, 65/2026, த/பெ நடேசன், சடையபடையாட்சி தெரு, அரியலூர்(தனிநபர்)	-	-	
29.	திரு.அய்யாசாமி, 57/2026, த/பெ சாமிநாதன், காந்திநகர், வெள்ளூர், அரியலூர் மாவட்டம்.	-	-	-
30.	திரு.ராமசாமி, 48/2026, த/பெ அப்பாசாமி, வெங்கனூர், அரியலூர்.	1441/-	1441/-	-
			மொத்தம் கைப்பற்றப்பட்ட தொகை	19,000/-

திடீர் சோதனையின் போது கீழ்கண்ட உண்மை நகல் சான்றிட்ட ஆவணங்கள் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

1	அரியலூர் வட்டாட்சியர் அலுவலக வருகைப் பதிவேடு - 2026 (4 தாள்)
2	அரியலூர் வட்டாட்சியர் அலுவலக பணம் கையாலும் பதிவேடு - 2026 (2 தாள்)
3	வண்டல் மண் விண்ணப்பங்கள் - 197
4	வண்டல் மண் எடுப்பதற்கான அனுமதி பதிவேடுகள் - 2

இந்த திடீர் சோதனையில் கணக்கில் வரதா பணம் ரூ.19,000/- மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டுள்ளது. மேலும், திரு.தனராஜ் என்பவர் அவரது வங்கி கணக்கு மூலமாகவும், G.Pay மூலமாகவும் ரூ.7,24,500/- லஞ்சப்பணம் பெற்று, பல்வேறு அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளது கண்டறியப்பட்டுள்ளது. மேற்படி அரியலூர் வட்டாட்சியர் அலுவலக அலுவலர்கள் மற்றும் ஆஜரில் இருந்த தனிநபர்களை விசாரணைக்கு தேவைப்படும் போது

ஆஜராகும்படி அறிவுறுத்தப்பட்டது. இந்த திடீர் இணை சோதனை செயல்முறைகள் 19.30 மணிக்கு முடிக்கப்பட்டது. 27.08.2026-ஆம் தேதி அரியலூர் மாவட்டம், அரியலூர் தாசில்தார் அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் இணை சேதனையின்போது 1)திரு.தனராஜ், 36/2026, த/பெ. தனபால், Census Technical Assistant, தற்காலிக ஒப்பந்த பணியாளர், வட்டாட்சியர் அலுவலகம், அரியலூர், 2)திரு.மகேந்திரன், 31/2026, த/பெ அறிவழகன், கிராம நிர்வாக அலுவலர், கரைவெட்டி, அரியலூர் மாவட்டம், 3)திரு.கதிர்வேல், 51/26, த/பெ. கந்தசாமி, துணை ஆய்வாளர் (சர்வே), வட்டாட்சியர் அலுவலகம், அரியலூர். 4) திரு.சிவக்குமார், 46/2026, த/பெ சதாசிவம், வடக்கு தெரு, நாயக்கர் பாளையம், அரியலூர் ஆகியோர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட தொகை ரூ.19,000/-ம், திரு.தனராஜ், 36/2026, த/பெ. தனபால், Census Technical Assistant, தற்காலிக ஒப்பந்த பணியாளர், வட்டாட்சியர் அலுவலகம், அரியலூர் என்பவரின் வங்கி கணக்கு மூலமாகவும், G.Pay மூலமாகவும் பெறப்பட்ட ரூ.7,24,500/-க்கு மேற்படி நபர்கள் சரியான முகாந்திரம் கூறாத காரணத்தால், அந்த பணம் யாவும் லஞ்சப்பணம் (Illegal Gratification) எனக் கருதப்படுவதால் மேற்படி அலுவலர்கள் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் 27.08.2026-ஆம் தேதி செய்யப்பட்ட திடீர் இணை சோதனை செயல்முறைகள், ரொக்கப்பணம் ரூ.19,000/-ம் மற்றும் இதர ஆவணங்களை இணைத்துள்ளேன். தங்கள் உண்மையுள்ள (ஒப்பம்) கு.செந்தில்குமார், வயது 60/2026 த/பெ. குப்புசாமி, முதுநிலை வருவாய் ஆய்வாளர்/மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், சமூக பாதுகாப்புத்திட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அரியலூர் மாவட்டம். பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: Sir, Received a complaint and Register the case in Vigilance and Anti-Corruption, Ariyalur detachment Cr.No.5/2026 u/s 7 & 12 r/w 7 of PC Act 1988 (as Amended in 2018) on 28.08.2026 at 16.00 hrs.

28.08.26
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Ariyalur.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசலுடன் வாதியின் புகார் மனுவை இணைத்து கனம் முதன்மை மற்றும் மாவட்ட அமர்வு நீதிமன்ற நடுவர், அரியலூர் அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

28.08.26
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Ariyalur.